# வெற்றிடங்கள்

**கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

## ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

IWWRMP

## நிதி வளம்: உலக வங்கி

ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டமானது (IWWRMP) கமத்தொழில், கால்நடை மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ள உலக வங்கியினால் நிதியிடப்பட்ட திட்டமாகும்.

அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் 2019-03-15ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் (MSD) பிரகாரம் ''ஒப்பந்த அடிப்படையில்'' முழு நேர வேலைக்கு பின்வரும் செயற்றிட்ட முகாமைத்துவ பணியாட்தொகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

<table>
<tr><th>இல.</th><th>பதவி</th><th>PS வகுதி</th><th>வெற்றிடங்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>01</td><td>கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிபுணர்</td><td>PS 3</td><td>1</td></tr>
<tr><td>02</td><td>தொடர்பாடல் அதிகாரி</td><td>PS 4B</td><td>1</td></tr>
<tr><td>03</td><td>பொறியியலாளர் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்கள் என்பவற்றில் அனுபவம் விரும்பத்தக்கது)</td><td>PS 4B</td><td>1</td></tr>
<tr><td colspan="4">மேற்கூறிய பதவிகளுக்கான (இல. 01 முதல் 03 வரை) சம்பளங்கள் 03ஆம் அட்டவணையில் 03ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதுடன் தேவையான அனுபவம் மற்றும் தகைமைகள் 2019-03-15ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் (MSD) 03ஆம் அட்டவணையில் 1ஆம் இணைப்பில் விபரிக்கப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td>04</td><td>முகாமைத்துவ உதவியாளர்</td><td>-</td><td>2</td></tr>
<tr><td colspan="4">சுயவிவரம்:<br>செயற்றிட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் உதவுதல், திட்ட கோப்புகள் மற்றும் பதிவுகளை பராமரித்தல், நிதி, பெறுகை மற்றும் ஏனைய திட்ட ஆவணங்களைத் தயாரித்தல்/சரிபார்த்தல். அல்லது<br>வாகன முகாமைத்துவம், பராமரிப்பு திட்டமிடல், சாரதி ஒருங்கிணைப்பு மற்றும் போக்குவரத்துக் கொள்கைகளுடன் இணங்குதல் உள்ளிட்ட திட்ட போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல், திட்ட வளங்களின் சீரான மற்றும் திறமையான இயக்கத்தை உறுதி செய்தல்.<br>தேவைப்பாடு:<br>க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம் மற்றும் ஏனைய இரு பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் மற்றும் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் (பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் 03 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் போதுமானது) மற்றும் ஆங்கிலத்தில் தொடர்பாடக்கூடிய மற்றும் கணனி ஆற்றலுள்ள அபேட்சர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பெறுகை / போக்குவரத்து தொடர்பான அனுபவம் மேலதிக தகைமையாகும்.</td></tr>
<tr><td>05</td><td>அலுவலக உதவியாளர்</td><td>-</td><td>1</td></tr>
<tr><td colspan="4">சுயவிபரம்/தேவைப்பாடு:<br>ஆவணங்களை கையாளுதல், கோப்பிடுதல் மற்றும் அலுவலகத்தின் அன்றாட நடவடிக்கைகளில் அதிகாரிகளுக்கு உதவுதல் உட்பட பொது அலுவலக உதவிகள் மற்றும் எழுதுவினைஞர் கடமைகளை மேற்கொள்ளல்.<br>க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம், உட்பட இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.</td></tr>
</table>

**பொதுவான நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் 62 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.
2. 2019-03-15ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம் மற்றும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுகள் கொடுப்பனவுகளின் அடிப்படையில் சம்பளம் இருக்கும்.
3. ஆரம்பத்தில் ஒரு வருடகால ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் என்பதுடன் செயற்றிற்ற தேவைப்பாடுகள் மற்றும் திருப்திகரமான செயற்றிறன் பேரில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக் கூடியது.
4. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து கடமைகளை மேற்கொள்ள வேண்டும்.
5. உலக வங்கியினால் நிதியிடப்பட்ட அல்லது இலங்கையில் ஏனைய வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களில் உள்ள அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. விண்ணப்பதாரர்கள் தேவையானபோது மேலதிக நேரம் மற்றும் வார இறுதி நாட்களில் வேலை செய்ய தயாராக இருக்க வேண்டும்.
7. விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தைக்கான நிரூபிக்கப்பட்ட பதிவைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அவர்களின் சேவைக்காலம் முழுவதும் மேலதிகாரிகளுடன் தொழில்முறை உறவுகளைப் பேண வேண்டும்.
8. இளம், துடிப்பான மற்றும் உற்சாகமான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

சுய விபரங்கள் சகிதம் உறவினரல்லாத நடுவர்கள் இருவரின் விபரங்கள் மற்றும் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்முறை சான்றிதழ்களின் பிரதிகள் சகிதமான விண்ணப்பங்களை 2026 ஜனவரி 23ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

அரசாங்க சேவை / மாகாண அரச சேவை உட்பட உள்ளூராட்சி நிறுவனங்கள் / அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிகள் சபைகள் மற்றும் முழுமையான அரசுரிமை நிறுவனங்களில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

மேலும், இதே விண்ணப்பத்தை ao.iwwrmp@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விடயத் தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். ஆதரவு தேடுதல் தகுதியீனமாகக் கருதப்படும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)**
**2ஆம் மாடி, மகாவலி நிலையம்,**
**இல. 96, ஆனந்த குமாரசாமி மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 011 2691163** **இணையதளம்: www.iwwrmp.lk**